




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 199 | 4 Pages | 16.02.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 199 | 4 பக்கங்கள் | 16.02.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா**

**ஆக்கம் பலவுந் தரும்**

**விளக்கம்:**

**அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மேன்மேலும் வளர்ச்சி குறையாத ஆக்கம் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.**

# சென்னை மத்திய கைலாஷ் பகுதியில் ரூ.60 கோடியில் கட்டப்பட்ட எல் வடிவ மேம்பாலத்தை திறந்து வைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, பிப்.16

சென்னை மத்திய கைலாஷ் பகுதியில் ரூ.60 கோடியில் கட்டப்பட்ட 'எல்' வடிவ மேம்பாலத்தை திறந்து வைத்தார்முதல்வர்மு.க.ஸ்டாலின். சர்தார் பட்டேல் சாலையில் இருந்து ராஜீவ் காந்தி சாலைக்கு வாகனங்கள் சிரமமின்றி செல்லும் வகையில் மேம்பாலம் திறக்கப்பட்டுள்ளது. எல்" வடிவ மேம்பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பயணம் செய்தார்.



சென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளில் ஒன்றான மத்திய கைலாஷ் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய எல் வடிவ பாலத்தினை முதல்வர் ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். ரூ.60 கோடி செலவில் சர்தார் படேல் சாலையை ராஜீவ் காந்தி சாலையுடன் இணைக்கும் வகையில் எல் வடிவத்தில் இந்த மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த பாலம் திறக்கப்பட்டால் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு எட்டப்படும்.

சென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளில் ஒன்றாக ஆளுநர் மாளிகையில் இருந்து அடையாறு நோக்கி செல்லும் சாலை உள்ளது. கஸ்தூரிபாய் நகர் ரயில் நிலையம் அருகே உள்ள மத்திய கைலாஷ் சந்திப்பில் தொடங்கி நாவலூர் வரை ஏராளமான ஐடி நிறுவனங்கள், கார்ப்பரேட் நிறுவனங்கள் அமைந்துள்ளன.

அதேபோல, வணிக நிறுவனங்களும் உள்ளன. இதனால், இந்த பகுதி எப்போதுமே கடுமையான போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடமாக இருக்கும். பீக் நேரத்தில் சிக்னல்களை தாண்டுவதற்கு மட்டுமே மணிக்கணக்கில் காத்துகிடக்க வேண்டியிருக்கும். வாகனங்கள் நத்தை போல ஊர்ந்து செல்வதற்குள் சிக்னல்கள் இரண்டு முறை மூன்று வரை விழுந்து விடும்.

அந்த அளவுக்கு கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவும் மத்திய கைலாஷ் சந்திப்பு பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக மேம்பாலம் கட்ட முடிவு செய்யபட்டது. சர்தார் படேல் சாலையை ராஜீவ் காந்தி சாலையுடன் இணைக்கும் வகையில் எல் வடிவத்தில் இந்த மேம்பாலம் கட்டப்பட்டது. முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

ரூ.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வந்த மேம்பால பணிகள் தற்போது முடிவு பெற்றுள்ளதால் இன்று சாலையை மக்கள் பயன்பாட்டுக்கு முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த பாலம் திறக்கப்படுவதால், ஐஐடி மெட்ராஸ் அடையார் புற்று நோய் மருத்துவமனை வரையில் உள்ள சாலையில் நிலவும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு எட்டப்படும் என்று தெரிகிறது.


## அஜித்பவார் மரணத்தில் சந்தேகம் வெளிப்படையான விசாரணை தேவை: அமித்ஷாவுக்கு ரோகித்பவார் கடிதம்



புனே, பிப்.16

மகாராஷ்டிரா துணை முதல்வராகவும், தேசியவாத காங்கிரஸ் தலைவராகவும் இருந்த அஜித்பவார், கடந்த ஜனவரி 29ம் தேதி பாராமதியில் விமான விபத்தில் உயிரிழந்தார். இது தொடர்பாக கடந்த 10ம் தேதியன்று செய்தியாளர் சந்திப்பு நடத்திய சரத்பவார் கட்சி எம்எல்ஏவும், அஜித்பவாரின் உறவினருமான ரோகித்பவார், பாராமதி விமான விபத்தில் நாசவேலை நடந்திருக்கலாம் என சந்தேகிக்க காரணம் இருப்பதாக கூறினார். அதுபோக பல்வேறு கேள்விகளை எழுப்பி பரபரப்பை ஏற்படுத்தினார். இந்நிலையில் பாராமதி விமான விபத்து குறித்து விரிவான மற்றும் வெளிப்படையான விசாரணை கோரி ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு ரோகித்பவார் கடிதம் எழுதியுள்ளார்.

## மருத்துவமனையில் இருந்து சரத்பவார் டிஸ்சார்ஜ்



புனே, பிப்.16

உடல்நல பாதிப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட என்சிபி(எஸ்பி) தலைவர் சரத்பவார் நேற்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். தேசியவாத காங்கிரஸ் சரத் சந்திரபவார் கட்சி தலைவர் சரத்பவாருக்கு, கடந்த 9ம் தேதியன்று மூச்சுவிடுவதில் சிரமம் மற்றும் தொடர் இருமல் ஏற்பட்டது. இதையடுத்து அவர் புனேயில் உள்ள ரூபிஹால் கிளினிக் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவ பரிசோதனை செய்ததில், சரத்பவாருக்கு மார்பில் நோய்த்தொற்று கண்டறியப்பட்டது. அதற்கான சிகிச்சை அவருக்கு அளிக்கப்பட்ட நிலையில் உடல்நலம் தேறினார். சமீபத்தில் மறைந்த துணை முதல்வர் அஜித்பவாரின் மனைவியும் துணை முதல்வருமான சுனேத்ரா பவார், தனது மகன்பார்த் பவாருடன் மருத்துவமனைக்கு சென்று சரத்பவாரிடம் நலம் விசாரித்திருந்தார். இந்நிலையில் நேற்று பிற்பகலில் சரத்பவார், மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். அவர் இன்னும் 3 அல்லது 4 நாட்கள் ஓய்வில் இருக்க மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

## ஆந்திர மாநில சட்டப்பேரவையில் ரூ.3.32 லட்சம் கோடிக்கு பொது பட்ஜெட் தாக்கல்



திருமலை, பிப்.16

ஆந்திர சட்டப்பேரவையில் ரூ.3.32 லட்சம் கோடிக்கான பொதுபட்ஜெட்டை நிதியமைச்சர்பையாவுல கேசவ் நேற்று தாக்கல் செய்தார். ஆந்திர மாநில சட்டப்பேரவையில் 20262027ம் ஆண்டுக்கான பொதுபட்ஜெட்டை நிதியமைச்சர் பையாவுலா கேசவ் தாக்கல் செய்தார். முன்னதாக அவர் முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணைமுதல்வர் பவன் கல்யாண் ஆகியோரை சந்தித்தார். பின்னர் சட்டப்பேரவையில் பட்ஜெட்டை தாக்கல் செய்து நிதியமைச்சர் பேசியதாவது: மாநில பிரிவினை ஒரு இழப்பு என்றால் அதன்பிறகு கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சி மாநிலத்திற்கு பெரிய இழப்புகளை அதிகளவில் ஏற்படுத்தியது. இந்த பட்ஜெட் வெறும் மசோதா மட்டுமல்ல, மக்களின் விருப்பங்களுக்கு ஏற்ப இருக்கும். மாநிலத்தை வளர்ச்சி மற்றும் நலனுடன் நடத்துவதே அரசின் கொள்கை. வரும் நிதியாண்டில் ரூ.3 லட்சத்து 32 ஆயிரத்து 205 கோடி பட்ஜெட் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட் 2047ம் ஆண்டு ஸ்வர்ணாந்திராவை இலக்காக கொண்டு முன்மொழியப்பட்டுள்ளது. ராயலசீமா விவசாயிகளின் கனவுகளை நனவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. முக்கிய துறைகளுக்கான ஒதுக்கீடுகள் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வருவாய் செலவு ரூ.2,56,143 கோடி, மூலதன செலவு ரூ.53,915 கோடி. வருவாய் பற்றாக்குறை ரூ.22,002 கோடி, ரொக்க பற்றாக்குறை ரூ.75,868 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் துறைக்கு ரூ.11,745 கோடி,பள்ளிக்கல்வித்துறைக்குரூ.32,208கோடி,பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு ரூ.23,650 கோடி, எரிசக்தி துறைக்கு ரூ.19,306 கோடி, பஞ்சாயத்து ராஜிக்கு ரூ.22,941 கோடி, நீர்ப்பாசனத்துறைக்கு ரூ. 18,223 கோடி என முன்மொழியப்பட்டுள்ளன. உணவு உற்பத்தியாளர்களின்ய நலனுக்காக ரூ.6,600 கோடி, மீன்வள சேவைக்கு ரூ.600 கோடி, விளை நிலைப்படுத்தலுக்கு ரூ.560 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.


## புதிய தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்தல் மூலம் தேர்வு

2026–27 ஆண்டிற்கான புதிய தலைமைத்துவத்தை தேர்வு செய்தது ICAI உலகின் மிகப்பெரிய கணக்கியல் தொழில்முறை அமைப்பான *The Institute of Chartered Accountants of India* (ICAI) யின் 26வது கவுன்சில், 2026–27 ஆண்டிற்கான புதிய தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்தல் மூலம் தேர்வு செய்துள்ளது. இதன்படி, சி.ஏ. பிரசன்ன குமார் டி அவர்கள் ICAIயின் தலைவராகவும்,



சி.ஏ. மங்கேஷ் பாண்டுரங்க்

கினாரே அவர்கள் துணைத் தலைவராகவும் 2026 பிப்ரவரி 12ஆம் தேதி பொறுப்பேற்றுள்ளனர். புதிய தலைமைத்துவம், நிறுவனத்தின் தொழில்முறை மேம்பாடு, தரநிலைகள் வலுப்படுத்தல் மற்றும் உலகளாவிய அளவில் இந்திய கணக்காய்வு துறையின் மரியாதையை உயர்த்தும் நோக்கில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



திண்டுக்கல்லை அடுத்த தவசிமடை ஜல்லிக்கட்டு போட்டியின் போது ஜல்லிக்கட்டு மாடு ஒன்று வழி தவறி காமாட்சி அம்மன் கோவில் தோட்டத்தில் உள்ள கிணற்றில் விழுந்தது. தகவல் அறிந்த திண்டுக்கல் தீயணைப்பு நிலைய மாவட்ட உதவி அலுவலர் மயில்ராஜ் தலைமையிலான தீயணைப்புதுறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஜல்லிக்கட்டு காளையை உயிருடன் மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தனர்

## தென்னையில் கரையான் தாக்குதல் கட்டுப்பாடு குறித்து விளக்கிய வேளாண் மாணவிகள்

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டத்தில் செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்சி நிலைய மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பயிற்சியின் கீழ் அ.காளாப்பூர் கிராமத்தில் உள்ள விவசாயி திரு. சுதாகர் அவர்களின் தோட்டத்தில் கரையானின் தாக்குதலால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும் கட்டுப்படுத்தும் முறைகளை பற்றியும் விவசாயிகளுக்கு மாணவிகள் விளக்கம் அளித்தனர்.



## பழனியில் இரண்டு இரு சக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்து 2 பேர் படுகாயம்



திண்டுக்கல் மாவட்டம் பழனி, திண்டுக்கல் ரோடு தனியார் திருமண மண்டபம் அருகே இரண்டு இரு சக்கரவாகனங்கள்நேருக்கு நேர் மோதி விபத்த ஆடைந்னதர்.

இந்த விபத்தில் திருமுருகன் மற்றும் சேக் ஆகிய இருவர் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக பழனி அரசு மருத்துவமனையில் அனுமதி மேற்படி சம்பவம் குறித்து பழனி நகர் காவல் நிலைய ஆய்வாளர் மணிமாறன் தலைமையிலான போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

## பள்ளி மாணவர்களுக்கான சிறப்பு சிலம்பம் போட்டி



சென்னை போரூர் மாங்காடு அருகே காஞ்சிபுரம் மாவட்டம் சிலம்பாட்டம் கழகம் நடத்திய பள்ளி மாணவ, மாணவர்களுக்கான 7ஆம் ஆண்டு சிறப்பு சிலம்பாட்டம் போட்டி நடைபெற்றது.

கடந்த ஏழு வருடங்களாக பள்ளி மாணவ மாணவிகளுக்கு நடத்தும் சிறப்பு சிலம்பம் போட்டியில் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள், மாணவிகள்கலந்துகொண்டு சிறப்பாக விளையாடி பரிசுகளை வென்றனர். இப்போட்டியில் ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு, தொடுதல், வால் வீச்சு, மற்றும் மான் கொம்பு, போன்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு, T 4 மாங்காடு காவல் நிலையம் ஆய்வாளர் ஜெய்சங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியினை இந்திய சிலம்பம் சமமேலான் தலைவர் முத்துராமன் போட்டியை தொடக்கி வைத்தார்.

மாநில பொதுச் செயலாளர் ரத்தினகுமார் வரவேற்புரை ஆற்றினார்.

காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் எஸ் ஆர் லட்சுமணன் வாழ்த்துரை வழங்கினார்.




தினகனி



# நாளை வெளியாக இருந்த இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 23ம் தேதி வெளியாகும் என தேர்தல் ஆணையம் அறிவிப்பு



சென்னை, பிப்.16

இந்திய உச்சநீதிமன்றத்தால் WP(C) எண் 1072/2025 மற்றும் 1145/2025 ஆகிய வழக்குகளில் 29.01.2026 அன்று வழங்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையமானது, 30.01.2026 வெளியிட்ட கடித எண் 23/SIR/2026/ERS ல், "முரண்பாடுகள்" (Logical Discrepancies) என்ற பிரிவில் இடம் பெற்றுள்ள நபர்களின் பெயர் பட்டியலை கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்கள், பொது இடங்கள் மற்றும் தாலுக்கா/துணை பிரிவு அலுவலகங்கள், நகரப் பகுதிகளில் உள்ள வார்டு அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில் வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்தியது.

மேலும், இம்முரண்பாடுகள் பிரிவில் பாதிக்கப்படக்கூடிய நபர்கள், முரண்பாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள், உரிய விளக்கத்துடன் தங்களது ஆவணங்களை, மறுப்புரைகளை நேரில் அல்லது தங்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி (வாக்குச்சாவடி முகவர்கள் உட்பட) மூலமாக சமர்ப்பிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையம் அறிவுறுத்தியது.

இதற்கமைவாக, இந்திய உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி முரண்பாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டு, அடுத்த 10 நாட்களுக்குள் தொடர்புடைய நபர்கள் தங்களது ஆவணங்களை / மறுப்புரைகளை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டனர். தற்போது, 01.01.2026 ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision SIR) தொடர்பான இறுதி வாக்காளர் பட்டியல் 23.02.2026 அன்று வெளியிடப்படும்.

# 2026 தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு: மனித நேய மக்கள் கட்சியின் சிறப்பு பொதுக்குழுவில் தீர்மானம்



சென்னை, பிப்.16

தமிழ்நாட்டு நலன்களையும் தமிழரின் தனித்த பண்பாடுகளையும் மாநில உரிமைகளையும் அடியோடு அழித்திடத் துடிக்கும் மதவாத ஃபாசிஸ்டுகளின் கொடும்பிடியிலிருந்து தமிழ்நாட்டை காத்து நின்று, சமய சார்பின்மை, சகோதரத்துவம், சமூக நீதி, சமய நல்லிணக்கம் ஆகிய கொள்கைகளின் வழியே தமிழ்நாட்டின் ஆட்சியை நடத்தி, கல்வியிலும் தொழில்துறையிலும் பொருளாதார வளர்ச்சியிலும் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலம் ஆக்கி, ஒன்றிய பாஜக அரசின் ஓயாத இடையூறுகளைக் கடந்து, ஓங்கி நிற்கும் திமுக அரசையும் அதை முத்தமிழறிஞர் கலைஞரின் முத்திரையோடு இயக்கும் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையும் இப்பொதுக்குழு மனமார பாராட்டுகிறது.

இந்த ஆட்சி தொடர்ந்திட, தமிழ்நாடு மென்மேலும் வளர்ந்திட, சமூக நல்லிணக்கம் மலர்ந்திட, சமூகநீதி கோட்பாடுகள் ஓங்கி ஒளிர்ந்திட, சிறுபான்மையினர் முன்னேற்றம் சிறந்திட திமுக கூட்டணிக்கு சிந்தாமல் சிதறாமல் வாக்களித்து, 2026 ஆம் ஆண்டின் சட்டப்பேரவைத் தேர்தலில் மகத்தான வெற்றியை திமுக கூட்டணி பெறுவதற்கு முதன்மை காரணமாக நமது களப்பணிகள் அமைந்திட வேண்டும் என இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

# சென்னையில் இதுவரை 2,268 பேரிடம் இருந்து 904.61 மெட்ரிக் டன் பழைய சோபா, மெத்தை அகற்றம்: மாநகராட்சி தகவல்



சென்னை, பிப்.16

சென்னையில் இதுவரை 2,268 பேரிடம் இருந்து 904.61 மெட்ரிக் டன் பழைய சோபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பழைய பொருட்கள் பெறப்பட்டு அகற்றப்பட்டுள்ளது. மேலும் நேற்று ஒரு நாள் மட்டும் 103 இடங்களிலிருந்து 46.21 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை ஒவ்வொரு சனிக்கிழமைகளில் பெற்று அகற்றிடும் புதிய நடவடிக்கை தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில், இதுவரை 18 சனிக்கிழமைகளில் 2,165 பேரிடம் இருந்து 858.40 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு அகற்றப்பட்டுள்ளது. நேற்று மட்டும் 103 பேரிடம் இருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 46.21 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும்நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே சென்னை மாநகராட்சியின் "நம்ம சென்னை" செயலியில் பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதன் அடிப்படையில் மாநகராட்சி பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள். இச்சேவையினை பொது மக்கள்பயன்படுத்தி பயன் பெறலாம்.

# ஆண்டுக்கு ரூ.1 வாடகைக்கு பெற்ற நிலம் மாத வாடகைக்கு மறு குத்தகை நிறுவனத்திடம் கட்டணத்தை சிப்காட் வசூலிக்கலாம்: உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவு




சென்னை, பிப்.16

காஞ்சிபுரம் மாவட்டம் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் ஏ.எஸ்.கேரியர் என்ற நிறுவனத்திற்கு 99 ஆண்டு குத்தகைக்கு 17.64 ஏக்கர் நிலம் கடந்த 2005ல் வழங்கப்பட்டது. இந்த நிலத்திற்கு அந்த நிறுவனம் ஆண்டுக்கு ரூ.1 என குத்தகை தர வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்நிலையில், அந்த நிலத்தில் உள்ள 93,718 சதுர அடி இடத்தை அந்த நிறுவனம் வேறு ஒரு நிறுவனத்திற்கு மாதம் ரூ.12 லட்சத்து 41,764க்கு மறு குத்தகைக்கு வழங்கியது.

இதை எதிர்த்து சிப்காட் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மனுவில், மறு குத்தகை தொகையை வழங்குமாறு அந்த நிறுவனத்திற்கு உத்தரவிடுமாறு கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற தனி நீதிபதி மனுவை தள்ளுபடி செய்து கடந்த 2022ல் உத்தரவிட்டார்.

இந்தஉத்தரவைஎதிர்த்து சிப்காட் தாக்கல் செய்த மேல்முறையீடு மனு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியண், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. சிப்காட் சார்பில் மூத்த வழக்கறிஞர் ஆர்.விடுதலை ஆஜரானார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், தொழில் நடத்துவதற்காக குறைந்த வாடகையில் வழங்கப்பட்ட அரசு நிலத்தை வணிக ரீதியாக சுரண்டுவதை ஏற்க முடியாது. இதுபோன்ற ஒப்பந்தங்கள் பொது கொள்கைக்கு எதிரானது. மாநிலத்தின் வளர்ச்சியை பாதிக்கும். குத்தகை ஒப்பந்தம் தொடர்பாக மேல் நிபந்தனைகளை விதிக்க சிப்காட்டுக்கு உரிமை உள்ளது. மறு குத்தகை கட்டணத்தை வசூலிக்க சிப்காட்டுக்கு அதிகாரம் உள்ளதை தனி நீதிபதி கருத்தில் கொள்ளவில்லை.

பொது வளத்தை தனியார் நிறுவனங்கள் லாபம் சம்பாதிப்பதற்காக பயன்படுத்த அனுமதிக்க கூடாது என்று உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் தெரிவித்துள்ளது. எனவே, கடந்த 2022ல் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. அந்த நிறுவனம் பெற்ற மறு குத்தகைக்கான கட்டணங்களை திரும்ப பெற சிப்காட்டுக்கு உரிமை உள்ளது, என்று உத்தரவிட்டனர்.

# தாம்பரம் ரயில் நிலையத்தில் ஏசி வசதியுடன் காத்திருப்பு அறை



தாம்பரம், பிப்.16

தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து சென்னை கடற்கரைக்கும், மறுமார்க்கமாக செங்கல்பட்டு வரையிலும் தினமும் இயக்கப்படும் ஏராளமான மின்சார ரயில்கள் மூலம் லட்சக்கணக்கான பொதுமக்கள் சென்று வருகின்றனர். அதேபோல சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்கும், தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கும் தினமும் ஏராளமான எக்ஸ்பிரஸ் ரயில்களில் லட்சக்கணக்கான பொதுமக்கள் தாம்பரம் வழியாகவும், தாம்பரத்தில் இருந்தும் வந்து செல்வது வழக்கம்.

இந்நிலையில் தற்போது எழும்பூர் ரயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெற்ற வருவதால் தென் மாவட்டங்களுக்கு செல்லும் பொது மக்கள் அனைவரும் தாம்பரம் ரயில் நிலையத்தில் இருந்து தான் செல்லும் நிலை இருப்பதாக கூறப்படுகிறது. இவ்வாறு செல்லவிருக்கும் பொது மக்களின் நலன் கருதி தாம்பரம் ரயில் நிலையத்தில் ஏசி வசதியுடன் கூடிய காத்திருப்பு அறை அமைக்க திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்றது.

ஏசி வசதியுடன் கூடிய காத்திருப்பு அறை தாம்பரம் ரயில் நிலையத்தில் முதல்முறையாக அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரயில் நிலைய மேற்பார்வையாளர் முகமது அப்துல் ரஹ்மான் மற்றும் தாம்பரம் ரயில் நிலைய அதிகாரிகள் இணைந்து புதிய காத்திருப்பு அறையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர். பயணிகள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதி, பாதுகாப்பு மற்றும் சௌகரியத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த அறை தாம்பரம் ரயில் நிலையத்தின் மேற்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அறையில் சிறப்பு வசதியாக ஆடம்பர சோபா அமர்வு வசதி, தனித்தனி ஆண், பெண் கழிப்பறைகள், தாய்மார் பாலூட்டும் அறை, இலவச வைபை வசதி, பல் நோக்கு சிற்றுண்டி கடை, மொபைல் சார்ஜிங் பாயிண்ட்கள், இலவசலக்கேஜ் வைக்கும் ரேக்குகள், பாதுகாப்பிற்காக கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏசி காத்திருப்பு அறை 24 மணி நேரமும் செயல்படும்.

இதற்கு கட்டணமாக ஒரு மணி நேரத்திற்கு ரூபாய் 35 இரவும் கூடுதல் நேரம் காத்திருக்கும் பயனியருக்கு ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 35 ரூபாய் என வசூலிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இதற்கான கட்டணத்தை பணம் மற்றும் டிஜிட்டல் கட்டண முறைகள் இரண்டும் ஏற்கப்படுகின்றன. இந்த வசதிகளை கோயம்புத்தூர் நிறுவனமான சன் மோட்டார்பார்ட்ஸ் என்று நிறுவனம் 5 ஆண்டு கால உரிமம் பெற்று செய்துள்ளது.

இந்த புதிய முயற்சி தாம்பரம் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கான சேவையை மேலும் மேம்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை, கோயம்புத்தூர் உற்சாகம் நிறைந்த ஸ்டார்ட் அப் நகரங்கள்: ஒன்றிய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் புகழாரம்




சென்னை, பிப்.16

சென்னை, கோயம்புத்தூர் உற்சாகம் நிறைந்த ஸ்டார்ட் அப் நகரங்கள் என ஒன்றிய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் புகழாரம் சூட்டினார். ஆராய்ச்சி தொழில் தொடக்கநிலை மற்றும் தொழில் முனைவோருக்கான 2 நாள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நேற்று தொடங்கியது. இதில் ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்.

அவர் பேசியதாவது: தமிழ்நாட்டில் பல நலத்திட்டங்கள், பிரதமர் உஜ்ஜ்வலா திட்டம் 40 லட்சத்திற்கும்மேற்பட்ட இலவச எரிவாயு இணைப்புகள், பிரதமர்ஸ்வநிதி 4 லட்சம் தெரு வியாபாரிகள் பயன் பெற்று வருகின்றனர். பிரதமர் ஆவாஸ் 20 லட்சம் வீடுகள் 8 வந்தே பாரத் ரயில்கள் தமிழ்நாட்டில் தமிழர்கள் மகத்தானவர்கள் அந்த மகத்துவம் தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்போது அரசு வேலை மட்டுமே வாழ்க்கை அல்ல. ஸ்டார்ட்அப், தொழில் முனைவோர் எண்ணம் வளர வேண்டும். ஸ்டார்ட் அப் என்பது மட்டும் அல்ல. தோல் தொழில், வேளாண்மை, பாரம்பரிய கைவினை அனைத்தும் ஸ்டார்ட்அப் ஆகலாம்.

சென்னை மற்றும் கோயம்புத்தூர் மிகவும் செயல்பாட்டும், உற்சாகமும் நிறைந்த ஸ்டார்ட் அப் சூழல் கொண்ட நகரங்கள். ஆனால் ஸ்டார்ட்அப்புகள் இந்த இரண்டு நகரங்களிலிருந்து மட்டுமே வருகின்றன என்பதல்ல. சேலம், தஞ்சாவூர் போன்ற இடங்களிலிருந்தும் ஸ்டார்ட் அப்புகள் உருவாகி வருகின்றன. ஒவ்வொரு தகவலும், ஒவ்வொரு உதவி திட்டமும் உங்கள் ஸ்மார்ட்போனில் கிடைக்கிறது. ஆகையால் இளைஞர்களிடம் நான் வேண்டுகோள் விடுப்பது என்னவென்றால், மோடி அரசின் கீழ் வாய்ப்புகள் வருகிறது. நீங்கள் பணம் செலவிட வேண்டியதில்லை. எங்கும் செல்ல வேண்டியதில்லை. உங்கள் நேரமும் சக்தியும் வீணாகாது. எல்லாமே உங்கள் மொபைலில் கிடைக்கிறது. நீங்கள் ஒரு முழுமையான தொழில் சூழலை உருவாக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

# நடப்பு மாத சிறார் திரைப்படத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

சென்னை, பிப்.16

பள்ளிக்கல்வித் துறை சார்பில், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்:

அரசுப் பள்ளிகளில் மாதந்தோறும் 6 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திரைப்படம் திரையிடப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த மாதம் 'அயலி பாகம்1' எனும் தமிழ் திரைப்படம் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

தொடர்ந்து அதன் 2ம் பாகம் பள்ளிகளில் நடப்பு மாதம் ஒளிபரப்பப்பட இருக்கிறது. படத்தை ஒளிபரப்பு செய்வதற்கான இணைப்பு லிங்க் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்குரிய பாடவேளைகளில் படத்தை திரையிட வேண்டும். இந்த பணிகளை ஒருங்கிணைக்க பொறுப்பாசிரியர்களை நியமிக்க வேண்டும்.

அவர்கள் படத்தை பார்த்த பின் கதைச் சுருக்கத்தையும் படித்து மாணவர்களுக்கு பட பின்னணியைவிளக்கவேண்டும். இது சார்ந்த வழிகாட்டுதல்களை பின்பற்றி படத்தை மாணவர்களுக்கு திரையிட்டு காண்பிக்க வேண்டும். மாநில அளவில் நடைபெறும்சிறார்திரைப்பட விழாவில் 25 சிறந்த மாணவர்கள் வெளி நாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். இதற்கான அறிவுறுத்தல்களை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் வழங்க வேண்டும்.

# 10ம் வகுப்பு பொதுத்தேர்வு மாணவர்களுக்கான தேர்வு எண் வெளியீடு



சென்னை, பிப்.16

தேர்வுத் துறை இயக்குநர் சசிகலா, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை விவரம்: தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் 11 முதல் ஏப்ரல் 6ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த தேர்வெழுத உள்ள பள்ளி மாணவர்களின் விவரம் மாவட்ட வாரியாக கேட்டுப்பெறப்பட்டது. அதன் அடிப்படையில் தற்போது தேர்வெண்ணுடன் கூடிய மாணவர்களின் பெயர்ப் பட்டியல் dgeapp.tnschools.gov.in எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதை அனைத்து பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் பிப்ரவரி 18ம் தேதிக்குள் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். இந்த தகவலை பள்ளிகளுக்குதெரிவித்து தொடர் நடவடிக்கைகளை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிஐஎஸ்எப் சைக்கிள் பேரணிக்கு மாமல்லபுரத்தில் வரவேற்பு



மாமல்லபுரம், பிப்.15

மத்திய தொழில் பாதுகாப்பு படையைச்(சிஐஎஸ்எப்) சேர்ந்த 33 பெண்கள்உள்ளிட்ட 130வீரர்கள் வந்தே மாதரம் 'சைக்களோ மாரத்தான்' என்ற பெயரில் நாட்டின் கடலோர பாதுகாப்பினை வலியுறுத்தியும், மீனவ குப்பங்களில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு அவசியம் மற்றும் தீவிரவாதத்தை ஒழிக்கும் வகையிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சைக்கிள் பயணத்தை கடந்த ஜனவரி மாதம் 28ம் கொல்கத்தாவில் தொடங்கினர். ஒரிசா, ஆந்திரா, தெலங்கானா மாநிலங்கள் வழியாக 15 நாட்கள் கடந்து சென்னை வந்தனர்.

பின்னர், நேற்று காலை உலக புகழ் பெற்ற சுற்றுலாத் தலமான மாமல்லபுரத்திற்கு வந்தனர். கடற்கரை கோயில் முன்பு மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள், வீராங்கனைகள் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். பிறகு, கல்பாக்கம் அணுமின் நிலையம் வழியாக சென்ற அவர்களுக்குஅணுமின்நிலைய அதிகாரிகள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

இதேபோல், கொக்கிலமேடு மீனவ பஞ்சாயத்தை சேர்ந்த குணசேகரன் தலைமையில், சிலம்பு கம்பு சுற்றியும், பூ மாலை அணிந்து, பட்டாசு வெடித்து வரவேற்றனர். ஒரு நாளைக்கு 120 முதல் 150 கி.மீ தூரம் வரை சைக்கிள் பயணம் மேற்கொள்ளும் வீரர்கள் மொத்தம் 6500 கிமீ தூரம் கடந்து கேரளாவில் நிறைவு செய்கின்றனர்.

# கலைஞர் மகளிர் உரிமை தொகை தவறான தகவல் பரப்ப வேண்டாம்: தமிழக அரசு சரிபார்ப்பகம் வேண்டுகோள்

சென்னை, பிப்.16

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை வங்கியில் எடுப்பது குறித்து தவறான தகவலை பரப்ப வேண்டாம் என்று தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் கூறியுள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் நேற்று வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது: கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு வழங்கிய உரிமைத் தொகையை வங்கியில் இருந்து 14ம் தேதி மாலைக்குள் எடுக்காவிட்டால் பணம் திருப்பி எடுக்கப்படும் என்ற தகவல் பரப்பப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு வழங்கக்கூடிய கலைஞர்உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரம் மற்றும் கோடைக் கால சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரம் சேர்த்து ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கிற்கு செலுத்தியது. இத்தொகையை அன்று மாலைக்குள் வங்கியில் இருந்து எடுத்து விட வேண்டும் என்பது முற்றிலும் தவறான தகவல். தமிழ்நாடு அரசு இதுபோன்ற எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. தவறான தகவலை பரப்பாதீர்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் பணம் வரவு வீடுகளின் முன் கோலமிட்டு முதல்வருக்கு பெண்கள் நன்றி

சென்னை, பிப்.16

வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் பணம் செலுத்தியதற்காக வீடுகளின் முன்பாக கோலமிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பெண்கள் நன்றி தெரிவித்தனர். தமிழக அரசின் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் பயனாளிகளான 1 கோடியே 31 லட்சம் பெண்கள் வங்கி கணக்கில் நேற்று முன்தினம் காலையில் திடீரென ரூ.5 ஆயிரம் பணம் வரவு வைக்கப்பட்டது. இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட வீடியோவில், 'இந்த பிப்ரவரி மாதம் மட்டுமில்லாமல் அடுத்த 2 மாசம் அதாவது மார்ச், ஏப்ரலுக்கானஉரிமைதொகை தவணைகளையும்சேர்த்து 3 ஆயிரம் ரூபாயும், கூடுதலாக கோடைகால செலவுகளை கருத்தில் கொண்டு




மேலும் 2 ஆயிரம் ரூபாய் சிறப்பு தொகையும் சேர்த்து, இந்த பிப்ரவரி மாசம் 5 ஆயிரம் ரூபாயைச் சிறப்பு மகளிர் உரிமை தொகையாக ஒரு கோடியே 31 லட்சம் பெண்களுக்கு வழங்க உத்தரவிட்டிருக்கேன்' என்று கூறியிருந்தார்.

இதையடுத்து சென்னை அண்ணா அறிவாலயம் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்து நேரில் நன்றி செலுத்தினர். பெண்கள்வரவேற்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திகைத்து போனார்.

இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் இந்த அதிரடி அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தமிழகம் முழுவதும் நேற்று காலையில் பெண்கள் தங்கள் வீடுகளுக்கு முன்பாக கோலமிட்டு தங்களுடைய நன்றியை வெளிப்படுத்தினர். அந்த கோலத்தில் கலைஞர் உரிமை தொகை ரூ.5000 பெற்று கொண்டோம். முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மிக்க நன்றி. ஸ்டாலின் தொடரட்டும். தமிழ்நாடு வெல்லட்டும். மகளிர் உரிமை தொகை, கோடைக்கால சிறப்பு நிதி ரூ.5000 தந்த தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி\\" என்று வாசகம் இடம் பெற்றிருந்தது. ஒவ்வொருவரின் வீடுகளின் முன்பாகவும் இது போன்று கோலங்கள் போடப்பட்டிருந்தது. இன்னும் சில இடங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் படத்தை வரைந்து இருந்தனர்.

இது பார்ப்போரை வெகுவாக கவர்ந்தது.

# சுசீந்திரம் பெரிய குளத்தில் பராமரிப்பு இன்றி கிடக்கும் கண்காணிப்பு கோபுரம்: வனத்துறை நடவடிக்கை எடுக்குமா?

நாகர்கோவில், பிப்.16

குமரி மாவட்டம் நான்கு நிலங்களை கொண்டவையாகும். குறிப்பாக நீர்நிலைகள் அதிகமாக காணப்படுகிறது. இதனால் குளிர்காலங்களில் வெளிநாட்டில் இருந்து குமரி மாவட்டத்திற்கு பல இன பறவைகள் உணவு தேடியும், இனப்பெருக்கத்திற்கும் வருகின்றன. இதனால் தேரூர், மாணிக்கம்புத்தேரி, சுசீந்திரம், வேம்பனூர் உள்பட பல குளங்கள் பறவைகள் சரணாலயமாக வனத்துறை அறிவித்து பாதுகாத்து வருகிறது. இந்த குளங்களுக்கு கூட்டம் கூட்டமாக பறவைகள் வந்து கூடுகட்டி குஞ்சு பொரித்து செல்வதை நாம் பார்க்க முடிகிறது. நாகர்கோவில் அருகே உள்ள சுசீந்திரம் பெரிய குளத்தில் பறவைகள் அமரும் வகையில் குளத்தின் நடுவே பெரிய திட்டுடன், மரங்கள் வளர்ந்து இருப்பது சிறப்பாகவுள்ளது.



இங்கு வரும் பறவைகளை பார்த்து ரசிக்க சுசீந்திரம் குளத்தின் கரையில் இரு இடங்களில் பறவைகள் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இதுபோல் தேரூர் குளம், மாணிக்க புத்தேரி குளக்கரைகளிலும் பறவைகள் கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுசீந்திரம் பெரிய குளத்தின் கரையில் உள்ள பறவைகள் கண்காணிப்பு கோபுரம் கடந்த 2014ம் தேதி பொதுமக்கள் பார்த்து ரசிக்கும் வகையில் திறக்கப்பட்டன. தற்போது போதிய பராமரிப்பு இல்லாமல் இந்த கண்காணிப்பு கோபுரங்கள் உள்ளன. நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் வந்து அமர்ந்து பறவைகள், இயற்கையை ரசித்து பார்க்கும் வகையில் சுசீந்திரம் பதினெட்டாம்படி பகுதியில் கண்காணிப்புகோபுரம்மற்றும் இருக்கைகள் அமைத்து கொடுத்துள்ளது.

சுசீந்திரம் காக்குமூரில் இருந்து வரும் சாலை சுசீந்திரம் பெரிய குளக்கரையில் வந்து சேரும் இடத்தில் ஒரு கண்காணிப்பு கோபுரம் உள்ளது. இந்த கோபுரத்தின் கீழ் பகுதியில் உள்ள அறை 24 மணி நேரமும் திறந்தே காணப்படுகிறது. போதிய பூட்டு இல்லாமல் உள்ளது. மேலும் கண்காணிப்பு கோபுரத்தின் மேல் பகுதிக்கு செல்லும் வழியும் திறந்துள்ளது. காணிப்பு கோபுர கட்டிடமும் பழுதாகி பல இடங்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. அந்த கண்காணிப்பு கோபுரம் இருக்கும் இடம் ஆட்கள் நடமாட்டம் இல்லாத பகுதி. ஆனால் வாகனங்கள் மட்டுமே சென்று வருகிறது.

இதனால் இரவு நேரங்களில் கண்காணிப்பு கோபுரத்தின் கீழ் பகுதியில் உள்ள அறை மற்றும் மேல் பகுதியில் சமூகவிரோத செயல்கள் நடப்பதற்கு வாய்ப்பாக உள்ளது. இதனை தடுக்கும் வகையில் அந்த கண்காணிப்பு கோபுரத்தின் கீழ் பகுதியில் உள்ள அறையை பூட்டி வைத்து, வனத்துறை அதிகாரிகள், ஊழியர்கள் தினமும் கண்காணிக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஓராண்டாக தொடரும் கட்டாய வசூல் அரசு நடவடிக்கை எடுக்குமா? எட்டயபுரம் ஆட்டுச்சந்தையில் கூடுதல் நுழைவு கட்டணம் வசூல்: விவசாயிகள், வியாபாரிகள் விரக்தி

எட்டயபுரம், பிப்.16

எட்டயபுரம் ஆட்டுச்சந்தையில் அரசு நிர்ணயம் செய்துள்ள நுழைவு கட்டணத்தை விட கூடுதலாக குத்தகைதாரர்கள் வசூல் செய்வதால் விவசாயிகளும், வியாபாரிகளும் விரக்தி அடைந்துள்ளனர். எனவே முறையான கட்டணம் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளனர். தமிழகத்தில், குறிப்பாக மானாவாரி விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் உபரி தொழிலாக ஆடு வளர்ப்பு தொழில் நடைபெறுகிறது. தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், ராமநாதபுரம், தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் ஆடு வளர்ப்பு பிரதான தொழிலாக உள்ளது. விவசாயிகள் வளர்க்கும் ஆடுகளை விற்பனை செய்து அதனை பணமாக மாற்றுவதற்கு தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஆட்டுச்சந்தை நடைபெறுகிறது.

மாவட்டந்தோறும் ஆட்டுச்சந்தை இருந்தாலும் தென் தமிழகத்தில் முக்கிய சந்தையாக எட்டயபுரம் ஆட்டுச்சந்தை விளங்குகிறது. வாரந்தோறும் நடைபெறும் இந்த சந்தையில் கோடிகளில் வியாபாரம் நடைபெறுகிறது. எட்டயபுரம் ஜமீன்தாரால் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களான கம்பு, சோளம், திணை, குதிரைவாலி, எள், உளுந்து உள்ளிட்ட விவசாய பொருட்களோடு தாங்கள் வளர்க்கும் ஆடுகளை விற்பனை செய்வதற்காக வாரந்தோறும் சனிக்கிழமை கட்டணம் ஏதுமின்றி இச்சந்தை உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் நிர்வாக காரணங்களுக்காக 5 பைசாவில் தொடங்கி 25 பைசா வரை வசூலிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 30 ஆண்டுகளாக எட்டயபுரம் பேரூராட்சி நிர்வாகத்தின் கீழ் ஆட்டுச்சந்தை நடைபெறுகிறது. ஆரம்பத்தில் பேரூராட்சி நிர்வாகம் 20 ரூபாய் நுழைவு கட்டணம் நிர்ணயம் செய்தது. ஆனால் குத்தகைதாரர்கள் 60 ரூபாய் என அடாவடியாக கட்டாய வசூல் செய்தனர். இதுகுறித்து தினகரனில் செய்தி வெளியான நிலையில், நிர்ணய கட்டணத்தை ரூ.20ல் இருந்து 60 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதனை சாதகமாக பயன்படுத்தி கொண்ட குத்தகைதாரர்கள், பேரூராட்சி நிர்வாகம் நிர்ணயம் செய்த கட்டணத்தை விட கூடுதலாக 40 ரூபாய் சேர்த்து நூறு ரூபாய் வசூலிக்கின்றனர்.

இதுபற்றி விவசாயிகள், வியாபாரிகள் கேட்டால் நாங்கள் ஏலம் அதிக தொகைக்கு எடுத்து விட்டோம். எங்களுக்கு கட்டுப்படியாகவில்லை என காரணம் கூறுகின்றனர். கூடுதல் கட்டணம் தர மறுக்கும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் மிரட்டப்படுகின்றனர். இதுசம்பந்தமாக எட்டயபுரம் பேரூராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே எட்டயபுரம் ஆட்டுச்சந்தையில் அரசு நிர்ணயம் செய்துள்ள கட்டணம் ரூ.60ஐ வசூலிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள், வியாபாரிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.


எட்டயபுரம் ஆட்டுச்சந்தை வருடத்திற்கு 52 முறை நடைபெறுகிறது. கடந்த ஏப்ரல் 1ம் தேதி துவங்கி தற்போது வரை 44 முறை சந்தை கூடியுள்ளது. குறைந்த அளவு ஒரு சந்தையில் 3 ஆயிரம் ஆடுகள் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஆட்டிற்கு ரூ.40 கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. ஒரு வாரத்தில் கூடுதலாக சுமார் 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வீதம் 44 சந்தை கூடுகையில் சுமார் ரூ.50 லட்சத்துக்கு மேல் விவசாயிகளிடம் இருந்து கட்டாய வசூல் செய்யப்பட்டுள்ளது.

எட்டயபுரம் ஆட்டுச்சந்தையில் ஆடுகள் நுழைவு கட்டணம் மட்டுமே வசூலிக்கும் உரிமை குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆடுகளை ஏற்ற இறக்க வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்க உரிமை இல்லை. ஆனால் ஆடுகளை ஏற்ற இறக்க வரும் வாகனங்களிடம் இவர்களாகவே ரசீது அச்சடித்து ரூ.30ல் இருந்து 50 வரை வசூலிக்கின்றனர். வாரந்தோறும் எட்டயபுரம் ஆட்டுச்சந்தைக்கு100க்கும் மேற்பட்ட வாகனங்கள் வரும் நிலையில் வாகன ஓட்டிகளிடம் கட்டாய வசூல் செய்கின்றனர். இதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்கள், எட்டயபுரம் வீதிகளில் எங்கு வாகனம் நின்றாலும் தேடிச் சென்று கட்டாய வசூல் செய்கின்றனர்.

# நீதிபதிக்கு கொடுக்க ரூ.50 லட்சம் வாங்கினாரா? மூத்த வழக்கறிஞர் மீதான குற்றச்சாட்டு குறித்து விஜிலென்ஸ் விசாரணை: உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, பிப்.16

தங்க வர்த்தகத்தில் ரூ.89 கோடி மோசடி தொடர்பான வழக்கில் சாதகமான உத்தரவைப் பெற நீதிபதிக்கு கொடுப்பதற்கு எனக் கூறி குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் மூத்த வழக்கறிஞர் ஒருவர் 50 லட்சம் ரூபாய் பெற்றதாக வந்த கடிதம் குறித்து விசாரணை நடத்த விஜிலென்ஸ் பிரிவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தங்க வர்த்தகத்தில் ரூ.89 கோடியே 90 லட்சம் மோசடி தொடர்பாக சிபிஐ பதிவு செய்திருந்த வழக்கை ரத்து செய்யக் கோரி நரேஷ் பிரசாத் அகர்வால் என்பவரும்,



வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி கணேஷ் அகர்வால் என்பவரும் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்கள் நீதிபதி நிர்மல்குமார் முன்பு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கில், மனுதாரர்களுக்காக ஆஜராகும் மூத்த வழக்கறிஞர் ஒருவர், சாதகமான உத்தரவைப் பெறுவதற்கு நீதிபதிக்கு கொடுக்க வேண்டும் என கூறி குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் 50 லட்சம் ரூபாய் பெற்றுள்ளதாகக் கூறி நீதிபதி நிர்மல்குமார், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை, சிபிஐ ஆகியோருக்கு நீதிக்கான அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கம் என்ற சங்கத்தின் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதையடுத்து, சம்பந்தப்பட்ட வழக்கில் ஆஜரான மூத்த வழக்கறிஞரை அழைத்து நீதிபதி நிர்மல் குமார் விசாரித்தார். இந்த குற்றச்சாட்டுகளை மறுத்த மூத்த வழக்கறிஞர், எந்த விசாரணைக்கும் தான் தயாராக இருப்பதாக கூறினார். சிபிஐ சிறப்பு வழக்கறிஞர், நீதிமன்றத்தின் கண்ணியத்தை பாதிக்கும் இந்த கடிதத்தை புறந்தள்ள வேண்டும். கடிதத்தை அனுப்பிய தனிநபரை கண்டுபிடிக்க வேண்டும் என்று தெரிவித்தார். இதையடுத்து, இதுதொடர்பாக விஜிலென்ஸ் பிரிவு விசாரணைக்கு உத்தரவிட்ட நீதிபதி நிர்மல்குமார், வழக்கு விசாரணையில் இருந்து விலகினார்.

# தெருக்களுக்கு குறிப்பிட்ட பெயரை தான் சூட்ட வேண்டும் என உத்தரவிட முடியாது: உயர் நீதிமன்றம் கருத்து

சென்னை, பிப்.16

தெருக்களுக்கு குறிப்பிட்ட பெயரை தான் சூட்ட வேண்டும் என்று உத்தரவிட முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் உள்ள செட்டி தெரு என்ற பெயர் சாதியை முன்னிலைப்படுத்தும் வகையில் உள்ளதால் அதை தாய்தந்தை கோயில் தெரு என்று மாற்ற உத்தரவிடக்கோரி அதே பகுதியைச் சேர்ந்த ஆர்.கே. வெங்கடேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.



இந்த வழக்கை விசாரித்ததனிநீதிபதி, சாதியை ஒழிக்க வேண்டும் என்ற மனுதாரரின் முயற்சி பாராட்டத்தக்கது என்றபோதும் அவர் விருப்பப்படி தெருவுக்கு பெயர் வைக்க வேண்டும் என்று கோருவதை ஏற்க முடியாது என கூறி மனுவை தள்ளுபடி செய்திருந்தார். இந்த உத்தரவை எதிர்த்து, வெங்கடேஷ் மேல் முறையீடு செய்தார். இந்த மனுதலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா, ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், தெருவுக்கு குறிப்பிட்ட பெயரை சூட்ட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட முடியாது. மனுதாரரின் ஆலோசனையைசட்டப்பூர்வ கடமையாக கருத முடியாது என்பதால் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவில் எந்த தவறும் இல்லை என கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# குமரி மாவட்டத்தில் நெற்பயிரில் மகசூல் குறைவு, விலை வீழ்ச்சி: ஒரு கோட்டை ரூ.1750க்கு விற்பனை

நாகர்கோவில், பிப்.16

குமரி மாவட்டத்தில் கும்பப்பூ நெற்பயிர் அறுவடையில் மகசூல் குறைவு மற்றும் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர். குமரி மாவட்டத்தில் தற்போது கும்பப்பூ நெற்பயிர் அறுவடை பணி தொடங்கியுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு தேரூர், நல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் அறுவடை பணி நடந்தது. தற்போது சுசீந்திரம் பெரிய குளம், பறக்கை குளங்களை நம்பி பயிரிடப்பட்டு உள்ள வயல்களில் சாகுபடி செய்து இருந்த நெற்பயிர்கள் அறுவடை தொடங்கியுள்ளது. குமரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் கன்னிப்பூ, கும்பப்பூ பயிர்களில் கும்பப்பூ பயிர்களில் அதிக பூச்சி தாக்குதல் இருக்கும். இதற்கு குளிர்ச்சியானசீதோஷண நிலை நீடிப்பதுவே காரணமாகும்.

கும்பப்பூ பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டு இருக்கும் பொன்மணி, திருப்பதிசாரம் 3 ரக நெல் மகசூல் அதிமாக இருக்கும். ஆனால் தற்போது அறுவடை செய்யப்படும் பறக்கை, சுசீந்திரம் பகுதியில் மகசூல் குறைவாக கிடைத்து வருகிறது. அறுவடை செய்யப்படும் நெல்லை வெளி மார்க்கெட்டில் வியாபாரிகள் அடிமாட்டு விலைக்கு கொள்முதல் செய்து வருகின்றனர்.



ஒரு கோட்டை பொன்மணி நெல் ரூ.1750க்கும், திருப்பதிசாரம் 3 ரக நெல் ரூ.1800க்கும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் தமிழக அரசு திறந்துள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் ஒரு குவிண்டால் ரூ.2500க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.

குமரி மாவட்டத்தில் பெரும்பாலும் குத்தகைக்கு நிலம் எடுத்தே விவசாய பணிகள் நடந்து வருகிறது. நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொண்டு கொடுக்கும் போது, நிலத்திற்கான கரம், அடங்கல் கொண்டு செல்ல வேண்டும். தற்போது குத்தகைதாரர்களுக்கு கிராம நிர்வாக அதிகாரிகள் அடங்கல் கொடுக்கவில்லை. இதனால் அவர்கள் நெல்கொள்முதல் நிலையத்தில் நெல்லை கொடுக்க முடியாமல், வெளி மார்க்கெட்டில் குறைந்த விலைக்கு கொடுத்து செல்கின்றனர். கிராம நிர்வாக அதிகாரிகள் குத்தகைதாரர்களுக்கு அடங்கல் வழங்க மாவட்ட நிர்வாகம் உத்தரவு வழங்க வேண்டும்எனவிவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

## நஷ்டத்தை சந்திக்கும் விவசாயிகள்

இது குறித்து பறக்கை விவசாயி ரவீந்திரன் கூறியதாவது: கும்பப்பூ சாகுபடி செய்யும் போது ஒரு ஏக்கர் நிலத்திற்கு அறுவடை காலம் வரை சுமார் ரூ.30 ஆயிரம் முதல் ரூ.35 ஆயிரம் வரை விவசாயிகள் செலவு செய்கிறார்கள். ஒரு ஏக்கர் நிலத்தில் இருந்து 32 கோட்டை நெல்வரை கிடைத்தால் மட்டுமே அவர்கள் செலவு செய்த தொகையை தவிர சிறிது லாபத்தை பார்க்க முடியும். ஆனால் தற்போது சுசீந்திரம், பறக்கையில் அறுவடை தொடங்கியுள்ளது. நெற்பயிரில் மகசூல் குறைவாககிடைத்துள்ளது. கடந்த நவம்பர் மாதம் கால நிலைக்கு மாறாக ஒரு சூறை காற்று வீசியது.

இதனால் பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. தற்போது அறுவடை செய்யப்படும் ஒரு ஏக்கர் வயலில் அதிகபட்சமாக 16 கோட்டை நெல் கிடைக்கிறது. ஒரு கோட்டை ரூ.1750க்கு விற்பனை செய்யும் போது ரூ.28 ஆயிரம் வரைகிடைக்கிறது. இதில் நெல்லை விற்பனைக்கு எடுத்து செல்லும் வண்டிக்கு வாடகையும் கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் செலவு செய்த பணம் கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். ஆனால் வைக்கோல் ஒரு கட்டு ரூ.200க்கு விலை போகிறது. வைக்கோலில் கிடைக்கும் பணத்தை வைத்து அறுவடை செய்ய பயன்படுத்தியவாகனத்திற்குபணத்தை கொடுத்து விட்டு நஷ்டத்தோடு வீட்டிற்கு விவசாயிகள் செல்கின்றனர்.

செலவு செய்த பணம் கிடைக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல் கொள்முதல் நிலையத்தில் அனைத்து விவசாயிகளும் நெல்லைகொண்டுகொடுப்பதற்கு குத்தகைதாரர்களுக்கு கிராம நிர்வாக அதிகாரிகள் அடங்கல் வழங்க உத்தரவிட்டு விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளி ஏற்ற வேண்டும் என்றார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

16.02.2026

# அரசு கொடுத்த ரூ.5 ஆயிரத்தை திருப்பி அனுப்பிய நபர் ஏன் தெரியுமா?



தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகை பெற்று வரும் பெண்களுக்கு தேர்தல் காலத்தில் வரும் 3 மாத உரிமைத் தொகை மற்றும் கோடைகால ஊக்கத் தொகை ரூ.2 ஆயிரம் ஆகியவற்றை சேர்த்து ரூ.5 ஆயிரத்தை மொத்தமாக 1 கோடியே 31 லட்சம் பெண்களுக்கு வழங்கி தமிழக அரசு இன்ப அதிர்ச்சியை கொடுத்தது . தமிழகம் முழுவதும் தமிழக அரசின் இந்த திடீர் பரிசுத்தொகை பேசு பொருளாக மாறி உள்ளது. அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் இதுபற்றி ஒவ்வொரு விதமாக பேசுகின்றன. இதையே சமூகநல ஆர்வலர் ஒருவர் வேறு விதமாக அணுகி இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

மதுரையை சேர்ந்த சங்கர பாண்டி என்ற அந்த சமூக ஆர்வலர் தனது மனைவி பெயருக்கு அரசு அனுப்பி இருந்த ரூ.5 ஆயிரம் பணத்தையும் மனைவி ஒப்புதலுடன் மணி ஆர்டர் மூலம் மீண்டும் அரசுக்கே திருப்பி அனுப்பி வைத்து உள்ளார். ★இது பற்றி குறிப்பிட்டு உள்ள அவர் 'கடன் சுமையுடன் இருக்கும் தமிழக அரசுக்கு என் பங்களிப்பாக இருக்கட்டும் என்று கடிதம் எழுதி உள்ளார். தன் பணத்தை திருப்பி அனுப்பியதை சமூக வலைத்தளங்களிலும் அவர் பதிவிட்டுள்ளார். இது பார்வையாளர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# லோயர் கேம்ப் பென்னிகுவிக் மணிமண்டபம் அருகே இரு சக்கர வாகனத்தில் வந்தவர் மீது மிளா மான் பாய்ந்தது. ஒருவர் படுகாயம்



தேனி மாவட்டம் கூடலூர் சவடை அம்மன் கோவில் தெருவை சேர்ந்த சேகர் என்பவர், குமுளியில் இருந்து கூடலூரை நோக்கி இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது லோயர் கேம்ப் பகுதியில் உள்ள பென்னிகுவிக் மணிமண்டபம் அருகே திடீரென சாலையை கடந்த மிளா மான், சேகர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது பாய்ந்தது. எதிர்பாராத இந்த சம்பவத்தால் சேகர் நிலை தடுமாறி கீழே விழுந்து பலத்த காயமடைந்தார். விபத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக ஓடி வந்து சேகரை மீட்டு, ஆம்புலன்ஸ் மூலம் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் . சாலைகளில் வனவிலங்குகள் திடீரென கடக்கும் அபாயம் அதிகரித்து வருவதால், குறிப்பாக லோயர் கேம்ப் போன்ற காட்டு பகுதி அருகே பயணம் செய்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது .

## இன்றைய ராசி பலன்கள் (16.02.2026)

மேஷம்: தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவசர முடிவுகளை மட்டும் தவிருங்கள்.

ரிஷபம்: பணவரவு சீராக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமான செய்தி கிடைக்கலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

மிதுனம்: தொடர்புகள் (COMMUNICATION) உங்களுக்கு சாதகமாக அமையும். வேலை சார்ந்த பயணம் வாய்ப்பு உள்ளது.

கடகம்: மன அமைதி முக்கியம். தேவையில்லாத கவலைகளை விட்டுவிடுங்கள். குடும்ப ஆதரவு கிடைக்கும்.

சிம்மம்: மதிப்பு, மரியாதை உயரும் நாள். தலைமைப் பொறுப்புகள் வரலாம். அகந்தையை தவிர்ப்பது நல்லது.

கன்னி: வேலையில்சிறுதடைகள்வந்தாலும் சமாளித்து முன்னேறுவீர்கள். செலவுகளில் கட்டுப்பாடு அவசியம்.

துலாம்: நட்பு மற்றும் கூட்டாண்மை நல்ல பலன் தரும். காதல் விஷயங்களில் தெளிவு கிடைக்கும்.

விருச்சிகம்: ரகசிய விஷயங்களில் கவனம் தேவை. பொறுமையாக நடந்தால் வெற்றி நிச்சயம்.


தனுசு: புதிய கற்றல், ஆன்மிகம் அல்லது பயணம் மன நிறைவு தரும். நல்ல செய்திகள் வரலாம்.

மகரம்: பொறுப்புகள் அதிகரிக்கும் நாள். உழைப்புக்கு மதிப்பு கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு உண்டு.

கும்பம்: புதுமையான சிந்தனைகள் வெற்றி தரும். நண்பர்களுடன் இணைந்து செயல்பட நல்ல நாள்.

மீனம்: உணர்ச்சிவசப்படாமல் முடிவெடுத்தால் நல்ல பலன் கிடைக்கும். கலை, படைப்புத்திறன் மேம்படும்.

# குப்பைக் கிடங்கில் மர்ம நபர் தீ வைப்பு – புகை மூட்டத்தில் மூழ்கிய கூடலூர், மக்கள் மூச்சுத்திணறல் அவதி!




தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சிக்கு உட்பட்ட குப்பைக் கிடங்கில் மர்ம நபர்கள் தீ வைத்ததாக கூறப்படும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் குப்பைகள் எரிந்து அடர்ந்த புகை மூட்டம் பரவியதால் சுற்றுவட்டார பகுதிகள் முழுவதும் புகையால் சூழப்பட்டன .

இந்த தீ விபத்தால் காந்திகிராமம், காமாட்சி அம்மன் கோவில் தெரு, பொம்மச்சி அம்மன் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகள் புகை மூட்டமாக காட்சியளித்தன. வீடுகளுக்குள் புகை நுழைந்ததால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர் . குறிப்பாக பெரியவர்கள், பெண்கள் மற்றும் சிறு குழந்தைகள் மூச்சுத் திணறலால் அவதிப்பட்டு மருத்துவ உதவி தேடும் நிலையும் ஏற்பட்டது.

தகவல் அறிந்ததும் பாஜக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் நகராட்சி அதிகாரிகளுடன் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு தீ அணைக்கப்பட்டது . இருந்தபோதிலும் புகை நீண்ட நேரம் நிலைத்ததால் மக்கள் அச்சத்தில் இருந்தனர்.

இந்த சம்பவம் குறித்து தீ வைத்த மர்ம நபர்களை கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், குப்பைக் கிடங்குகளை பாதுகாப்புடன் பராமரிக்க மாவட்ட நிர்வாகம் உடனடி தலையீடு செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் வலியுறுத்தினர்.

குப்பைக் கிடங்கில் ஏற்பட்ட இந்த தீ விபத்து, பொதுமக்களின் உடல்நலத்தையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கும் வகையில் உள்ளதால், நிரந்தர தீர்வு காண வேண்டியது அவசியமாகியுள்ளது .

# லோயர் கேம்ப் பென்னிகுவிக் மணிமண்டபம் அருகே இரு சக்கர வாகனத்தில் வந்தவர் மீது மிளா மான் பாய்ந்தது. ஒருவர் படுகாயம்



தேவாலா ஹோலி கிராஸ் கான்வென்ட் மெட்ரிகுலேஷன் பள்ளியில் இன்டர்நேஷனல் ப்ரைடு புக்ஸ் ஆப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் மற்றும் சவுலின் டெம்பிள் ஆப் மார்ஷியல் ஆர்ட்ஸ் இனைத்து நடத்திய உலக சாதனை நிகழ்வு நடைபெற்றது. இதில் 16 மாணவ மாணவிகள் வெவ்வேறு விதமான தனிநபர் உலக சாதனை செய்தனர். அவற்றுடன் சுமார் 100 மாணவர்கள் குழுவாக இணைந்து 1 மணிநேரம் 26 வினாடி தொடர்ந்து தற்காப்புக் கலை பயிற்சி செய்து பெண் குழந்தை பாதுகாப்பு தலைப்பின் கீழ் பல்வேறு விதமான தற்காப்பு கலைகள் செய்து சாதனை படைத்தனர். உலக சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு இளம் சாதனையாளர் விருது மற்றும் இன்டர்நேஷனல் பிரைட் புக்ஸ் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் நிறுவனத்தின் உலக சாதனை சான்றிதழ்களும் வழங்கி கௌரவம் செய்யப்பட்டது. இவ்விலாவிற்க்கு சிறப்பு விருந்தினராக ஹாலிக்கிராஸ் கான்வென்ட் மெட்ரிகுலேஷன் பள்ளியின் முதல்வர் இனிகோ மேரி அவர்கள் கலந்து சிறப்பித்தார் மற்றும் இன்டர்நேஷனல் பிரைடு புக்ஸ் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் இன்டர்நேஷனல் டைரக்டர் கிராண்ட் மாஸ்டர். அம்பாசிடர் டாக்டர். பிரதீப் சந்திரதாஸ் கலந்து விழாவினை துவக்கி வைத்தார் உடன் தமிழ் நாடு மாநில செயலாளர் திரு. விக்னேஷ் அவர்கள் விழாவில்கலந்துசிறப்பித்தார். இதில் உதகை மதுரை, கோவை, சேலம் போன்ற பகுதிகளில் இருந்து மாணவ மாணவிகள் பங்கேற்று சாதனை புரிந்தனர். மதுரை உயர் நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர் திருமதி சீலா ஜெர்லின் மேரி மற்றும் சென்னையில் இருந்து காவல் துறை முன்னால் அதிகாரியும் காரத்தை உலக சாதனையாளர் ஜப்பான், மலேஷியா, இலங்கை , தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்ற கராத்தே புரட்சி வெல்லும் என்ற வீரர் ஐயா தனசேகரன் அவர்கள்ளும் இணைந்து கொண்டு இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துள்ளனர், சவுலின் டெம்பில் ஆப் மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி இன் நிறுவனர் மற்றும் எக்ஸாமினர் , ஆசிரியர்திருசிவக்குமார், அவர்கள் 16 தனிநபர் சாதனையாளர்களை உருவாக்கியுள்ளார் இது மட்டும் இன்றி 100 மாணவர்களை குழு உலக சாதனையாளராக உருவாக்கியுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக சேலத்தில் இருந்து திரு சங்கரன் கராத்தே மாஸ்டர் அவர்களும் ஊட்டியில் இருந்து நரேஷ் குமார் கராத்தே ஆசிரியர் அவர்களும் கலந்து விழாவினை சிறப்பித்தனர்.

# ஜி.வி.பிரகாஷின் "ஹாப்பி ராஜ்" படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் ரிலீஸ் தேதி அறிவிப்பு




தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளர்களில் ஒருவரான ஜி.வி.பிரகாஷ் குமார் தொடர்ந்து பல்வேறு மொழிகளில் பெரிய படங்களுக்கு இசையமைத்து வருகிறார். இசையில் மட்டுமல்லாது நடிப்பிலும் கவனம் செலுத்தி வருகிறார். இவரது நடிப்பில் கடைசியாக் வெளியான படம் 'பிளாக்மெயில்'. மு.மாறன் இயக்கிய இதில் கதாநாயகியாக தேஜு அஸ்வினி நடித்திருந்தார். இந்த படம் நல்ல வரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து, ஜிவி பிரகாஷ் 'ஹாப்பி ராஜ்' புதிய படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தினை பிரதீப் ரங்கநாதனின் உதவி இயக்குனர் மரியா இளஞ்செழியன் இயக்கி வருகிறார். நகைச்சுவை கதைக்களத்தில் உருவாகி வரும் இதில் நடிகர் அப்பாஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இதற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைத்துள்ளார்.

பியாண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படம் காதல் கதைக்களத்தில் உருவாகியுள்ளது. இப்படத்தில் ஜிவிக்கு ஜோடியாக நடிகை கௌரி பிரியா நடித்துள்ளார். 'ஹாப்பி ராஜ்' படத்தின் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில், 'ஹாப்பி ராஜ்' படத்தின் முதல் பாடலான 'ஆடினே இருப்பேன்' வரும் 17ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படத்தின் புரோமோ வீடியோ வெளியாகியுள்ளது.

# இசையமைப்பாளரை மணந்த "கருடன் " பட நடிகை



விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'பாரதி கண்ணம்மா' தொடரில் நடித்ததன் மூலம் மக்கள் மனங்களைக் கவர்ந்தவர் ரோஷினி ஹரிப்ரியன். இதில் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து, 'குக் வித் கோமாளி' நிகழ்ச்சியின் 3 வது சீசனில் போட்டியாளராகக் கலந்து கொண்டார்.

சசிகுமார், சூரி நடிப்பில் வெளியான கருடன் படத்தில் சசிகுமாருக்கு ஜோடியாக நடித்திருந்தார். 'மெட்ராஸ் மேட்னி' படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்திருந்தார்.

பாண்டிராஜ் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிப்பில் வெளியாகி வரவேற்பைப் பெற்ற 'தலைவன் தலைவி' படத்தில் விஜய் சேதுபதியின் தங்கை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இந்நிலையில்,தற்போதுரசிகர்களுக்குஇன்பஅதிர்ச்சிஅளிக்கும் வகையில், ரோஷினிக்கு திருமணம் நடைபெற்றுள்ளது. இசையமைப்பாளர் சுந்தர மூர்த்தி கே.எஸை திருமணம் செய்துகொண்டுள்ளார்.

பொம்மைநாயகி,பெருசு,கையும்களவும்,தண்டட்டி,பிகினிங்,ஐராஉள்ளிட்டதிரைப்படங்களில்இசையமைப்பாளராக இவர் பணியாற்றியுள்ளார்.

# சூர்யாவின் "கருப்பு" பட ரிலீஸ் குறித்து அப்டேட் கொடுத்த இயக்குநர் ஆர்.ஜே பாலாஜி



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. இவர் ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் 'கருப்பு' படத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். இதில் கதாநாயகியாக திரிஷா நடித்துள்ளார்.

சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகாமாயாரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இத்திரைப்படம், நீதிமன்ற வழக்கு ஒன்றை மையமாக வைத்து அதில் கடவுள் நம்பிக்கைகளை இணைத்து உருவாகியுள்ளது.

இந்த நிலையில், இப்படத்தின் ரிலீஸ் தொடர்பாக புதிய அப்டேட் ஒன்றை படத்தின் இயக்குநர் ஆர்.ஜே.பாலாஜி கொடுத்துள்ளார். ஆர்.ஜே பாலாஜி "தேர்தல் முடிந்த பிறகு கோடைக்காலத்தில் நடிகர் சூர்யாவின் 'கருப்பு' படம் ரிலீஸாகும். குடும்பத்துடன் பார்க்கும் படமாக இருக்கும். 'வலிமை' அப்டேட் போல கடந்த ஓராண்டாக எல்லாரும் 'கருப்பு' அப்டேட் கேட்டுட்டு இருக்காங்க" என்றார்.

# ரஞ்சி கோப்பை அரையிறுதி: கே.எல்.ராகுல் சதமடித்து அசத்தல்



ரஞ்சி கோப்பை அரையிறுதி போட்டிகள் இன்று தொடங்கின. லக்னோவில் நடைபெற்று வரும் முதல் அரையிறுதியில் கர்நாடகா உத்தரகாண்ட் அணிகள் மோதி வருகின்றன. டாஸ் வென்ற உத்தரகாண்ட் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி கர்நாடகா அணியின் கே.எல். ராகுல், மயங்க் அகர்வால் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

மயங்க் அகர்வால் 5 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து கே.எல். ராகுல் உடன் தேவ்தத் படிக்கல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இருவரும் அடுத்தடுத்து சதம் விளாசினர்.கே.எல். ராகுல் 153 பந்தில் சதம் அடித்தார். தேவ்தத் படிக்கல் 144 பந்தில் சதம் விளாசினார்.

தொடர்ந்து விளையாடிய கே.எல். ராகுல் 211 பந்தில் 141 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 2வது விக்கெட்டுக்கு கே.எல். ராகுல் தேவ்தத் படிக்கல் ஜோடி 278 ரன்கள் குவித்தது. கே.எல். ராகுல் ஆட்டமிழக்கும்போது கர்நாடகா 2 விக்கெட் இழப்பிற்கு 296 ரன்கள் குவித்திருந்தது.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் கர்நாடக அணி 90 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 355 ரன்கள் எடுத்துள்ளது. படிக்கல் 148 ரன்னுடனும், கருண் நாயர் 38 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். நாளை 2ம் நாள் ஆட்டம் நடைபெறும்.

# பெண்கள் கிரிக்கெட்: ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி



இந்திய மகளிர் கிரிக்கெட் அணி மூன்று டி20, 3 ஒருநாள் மற்றும் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாட ஆஸ்திரேலியா சென்றுள்ளது. இதில் இந்தியாஆஸ்திரேலியா மகளிர் அணிகள் மோதும் முதலாவது டி20 கிரிக்கெட் போட்டி சிட்னியில் இன்று நடந்தது.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ்வென்றஇந்தியஅணியின்கேப்டன்ஹர்மன்பிரீத் கவுர் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி ஆஸ்திரேலிய அணி முதலில் பேட்டிங் செய்தது. அந்த அணி 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 133 ரன்களை எடுத்துள்ளது. ஜார்ஜியா அதிகபட்சமாக 30 ரன்கள் எடுத்தார். இந்திய அணி தரப்பில் அருந்ததி ரெட்டி அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதையடுத்து 134 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி பேட்டிங் செய்தது. ஷபாலி வர்மா 21 ரன்னில் ஆட்டமிழந்தார். மந்தனாவும், ஜெமிமாவும் பேட்டிங் செய்துகொண்டிருந்தனர். இந்திய அணி 5.1 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 50 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. மந்தனா 16 ரன்னிலும், ஜெமிமா 9 ரன்னிலும் களத்தில் இருந்தனர். ஆனால் மழை இடைவிடாமல் தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது. இதனால் மேற்கொண்டு போட்டியை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது.

இதையடுத்து நடுவர்கள் டி.எல். விதியை கடைப்பிடித்தனர். அப்போது, டி.எல். விதிப்படி இந்திய அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக நடுவர்கள் அறிவித்தனர். இதையடுத்து, 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 10 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது.

# டி20 உலகக்கோப்பை: இந்தியா பாகிஸ்தான் ஆட்டத்தை காண மைதானத்தில் குவியும் ரசிகர்கள்

10வது டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் 4 பிரிவுகளில் 20 அணிகள் பங்கேற்றுள்ளன. லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும்.

இந்நிலையில், டி20 உலகக்கோப்பையில் இன்று நடைபெறும் 27வது லீக் ஆட்டத்தில் இந்தியா பாகிஸ்தான் மோத உள்ளன. இலங்கை தலைநகர் கொழும்புவில் உள்ள பிரேமதாசா மைதானத்தில் ஆட்டம் இரவு 7 மணிக்கு தொடங்க உள்ளது.

ஆட்டம் நடைபெற இன்னும் 2 மணிநேரம் உள்ள நிலையில் ஆட்டத்தை காண ரசிகர்கள் மைதானத்தில் குவிந்த வண்ணம் உள்ளனர். 35 ஆயிரம் இருக்கைகளை கொண்ட பிரேமதாசா மைதானத்தில் இன்று நடைபெறும் இந்தியா பாகிஸ்தான் ஆட்டத்திற்கான டிக்கெட் ஏற்கனவே முழுமையாக விற்றுத்தீர்ந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066